# யூலை – 03 – புதன்

## புனித தோமா - திருத்தூதர்

**கண்டதால் நம்பினாய். காணாமலே நம்புவோர் பேறுபெற்றோர்" யோவா 20:29**

-----------------------------------------------------------------------

## முதல் வாசகம் : ஏபேசியர் 2 : 19 – 22

சகோதரர், சகோதரிகளே! இனி நீங்கள் அன்னியர் அல்லஇ வேற்று நாட்டினரும் அல்ல. இறைமக்கள் சமுதாயத்தின் உடன் குடிமக்கள் கடவுளின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். திருத்தூதர்கள், இறைவாக் கினர்கள் ஆகியோர்களை அடித்தளமாகவும், கிறிஸ்து இயேசுவையே மூலைக்கல்லாகவும் கொண்டு அமைக்கப்பட்ட கட்டடமாய் இருக்கிறீர்கள். கிறிஸ்துவின் உறவில் கட்டடம் முழுவதும் இசைவாகப் பொருந்தி, ஆண்டவருக்கென்று தூய கோவிலாக வளர்ச்சி பெறுகிறது. நீங்களும் அவரோடு இணைந்து தூய ஆவி வழியாகக் கடவுளின் உறைவிடமாகக் கட்டப்பட்டு வருகிறீர்கள்.

**பதில்பாடல் :** உலெகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம்
நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்

## நற்செய்தி : யோவான் 20 : 24 - 29

பன்னிருவருள் ஒருவரான திதிம் என்னும் தோமா, இயேசு வந்தபோது அவர்களோடு இல்லை. மற்றச்சீடர்கள் அவரிடம், "ஆண்டவரைக் கண்டோம்" என்றார்கள். தோமா அவர்களிடம், "அவருடைய கைகளில் ஆணிகளால் ஏற்பட்ட தழும்பைப் பார்த்து, அதில் என்விரலை விட்டு, அவர் விலாவில் என் கையை இட்டாலன்றி நான் நம்பமாட்டேன்" என்றார். எட்டு நாள்களுக்குப்பின் அவருடைய சீடர்கள் மீண்டும் உள்ளே கூடியிருந்தார்கள். அன்று தோமாவும் அவர்களோடு இருந்தார். கதவுகள் பூட்டப்பட்டிருந்தும் இயேசு உள்ளே வந்து அவர்கள் நடுவில் நின்று, "உங்களுக்கு அமைதி உரித்தாகுக!" என்று வாழ்த்தினார். பின்னர் அவர் தோமாவிடம், "இதோ! என்கைகள். இங்கே உன்விரலை இடு. உன் கையை நீட்டி என்விலாவில் இடு. ஐயம் தவிர்த்து நம்பிக்கைகொள்" என்றார். தோமா அவரைப் பார்த்து, "நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!!" என்றார். இயேசு அவரிடம், "நீ என்னைக் கண்டதால் நம்பினாய். காணாமலே நம்புவோர் பேறுபெற்றோர்" என்றார்.

**தியானம்:** இன்றைய உலகில் பல வகையான பதில் தெரியாத கேள்விகள் மக்களிடம் உள்ளன. கடவுள் இருக்கின்றாரா? இல்லையா? என்ற நிலையில் வளர்ந்து வருகின்ற விஞ்ஞான உலகம் மக்களை தமது புதிய புதிய ஆராச்சிகளால் குழப்பத்தில் ஆழ்த்துகின்றது. இன்றைய நாளில் நாம் நினைவு கூரும் புனிதராகிய தோமா நம்பிக்கை குன்றியவராக பார்க்கப் படுகின்றார். ஆனால் அவரின் நம்பிக்கை தான் அதிகம் என்பதனை அவர் தமது வாழ்வால் நிரூபித்துக் காட்டினார். இவரும் யேசுவும் ஒரே உருவ ஒற்றுமை கொண்டவர்கள் என்றும் அதனால்தான் யேசுவை இரவில் காட்டிக்கொடுக்க யூதாஸ் தேவைப்பட்டதாகவும் ஒரு கருத்து உண்டு. இளம் வயதுடையவராகவும் துடிப்பானவராகவும் பார்க்கப் படுகின்றார். சீடர்கள் பயந்து பூட்டிய அறைக்குள் முடங்ககிய போது இவர் தைரியமாக வெளியில் சென்றார், அதனால்தான் அவரால் யேசுவைப் பார்க்க முடியவில்லை, இது நம்பிக்கை குறைவு என்பதனைவிட ஓர் ஆதங்கம் என்றும் சொல்லலாம். மற்றவர்களால் பார்க்க முடிந்தது என்னால் முடியவில்லையே என்ற ஆதங்கத்தின் வெளிப்பாடகவும் இருக்கலாம். யேசு அதனை அறிந்தவராக மீண்டும் அவர் முன் தோன்றி அவரது நம்பிக்கையை பலப்படுத்துகின்றார். அதனால் தான் அவரால் உலகின் கடை எல்லை வரை இறை அரசை அறிவிக்க முடிந்தது. இந்தியா போன்ற கீழைத்தேய நாடுகளில் இறை அரசை அறிவித்தவர் இவரே. தமது சொல்லால் மட்டும் அல்ல வாழ்வாலும் வாழ்ந்து காட்டியவர். அவர் வாழ்ந்துகாட்டிய பாதையில் வாழ நாமும் அழைக்கப் பட்டிருக்கின்றோம்.